GO 6 – English Translation

With the permission of the Governor, Adi Dravidar, and Tribal Welfare Department, The Government Act Note No. O3 / DS / (VS) 2011, was declared on 6.1.2012. This Government Order (GO) states that the GO No. 26 passed on 30.3.2000 had been reconsidered and declared as the Government Act Note No. O3 /DS/(VS)2011 after the requisition of the Commissioner of the Department of Adi Dravidar and Tribal Welfare.

Government Act No. 03/ DS (VS) / 2011 states the following

- Order No. 26, dated 30.3.2000, was cancelled.
- Under the Government of India's Post-Matric Scholarship Scheme, the Post-Matric Scholarship is given to Adi Dravidar and Tribal students who continue their studies beyond the Xth standard and whose parental / guardian's income does not exceed Rs. 2,00,000/- per annum. They are given assistance to meet the essential expenditure towards compulsory fees and non refundable fees payable to the educational institutions. This GO also states that all the compulsory fees payable by the students are paid directly to the respective government, / Government Aided Educational Institutions / Self Financing Educational Institution (including minority colleges) Government Aided Educational Institutions / Self Financing Educational Institution (including minority colleges). The State Government is implementing a Post-Matric Special scholarship scheme for the Adi Dravidars converted to Christianity who is also eligible for scholarship under the Government of India Scheme. The Scholarship is eligible only for the students who joined under government seats or government allotted seats in Self Financing Educational Institution (including minority colleges) Government Aided Educational Institutions / Self Financing Educational Institution (including minority colleges).
- Central Government financial assistance is given from 2011–2012 academic years on the Enrollment / Registration, Tution, Games, union, Library, Magazine, Medical Examination and Such other fees as are compulsory and payable by the scholar to the institution or university/board.

GO 92 – English Translation

As per the order of the Governor, Adi Dravidar, and the Tribal Welfare Department, The Government Act Note No. 92 was declared on 11.09.2012 with the concurrence of the Department of Higher Education GO NO.16981/j1/2012 dated 6.9.2012, Department of Public Welfare and Family welfare GO NO.31865/MCA1/2012 dated 3.9.2012.

The educational fees for the seat allotted by the Government in self-financing Technical Educational institutes are framed and fixed by the Commission (Presently Justice N.V. Balasubramanian Commission)

As per the GO No. 06 of Adi Dravidar and the Tribal Welfare Department, Post-Metric Scholarship will be given by the Commission((Presently Justice N.V. Balasubramanian Commission) framed for finalizing the fees of Self-financing educational institutions (including minorities institutions).

After the academic year 2012, the Commission (Presently Justice N.V. Balasubramanian Commission) finalized fees will release to the colleges after collecting the total counts of SC, ST & SCA seats filled through counseling by the directorate of College Education, self-financing Engineering colleges, directorate of medical education and related to medicine Directorate of Education, and directorate of technology. The total fees can be collected from the Adi dravidar and Tribal Welfare Department and distributed by them.

For the Institutions like Self-financing arts and Science colleges, Polytechnic, all other degree-awarding colleges, the post-matric fees for the SC, ST, and SCA students will be given based on the fees finalized by the Commission(Presently Justice N.V. Balasubramanian Commission) and the government. The total fees can be collected from the Adi Dravidar, and Tribal Welfare Department and distributed by them.

Adi Dravidar Welfare Commissioner was instructed to dispatch the expected annual fees of the concerned department prior for that, a separate bank account has to be maintained for each directorate, the funds can be received, maintained, and released on account of the above-mentioned theme. At the end of every academic year utilization reports have to be collected from the concerned directorate and the same submitted to the Government.

GO 92 – English Translation

College fees should not be collected from any SC, ST, and SCA students at the beginning of the academic year that are decided by Government Commission for self-financing engineering, medical, educational, technical, and other institutions . For distributing the PMS, needed fund has to be collected from ADTW by the concerned director of various education at the beginning of the academic year and the same can be distributed to the colleges under their control.

It has to be ensured by the concerned directorate that the candidate applied to receive PMS's parents' or guardians' income is only less than Rs. 200000/-.

Candidates who are all already receiving scholarships from ADTW will receive the same from District Adi Dravidar and the Tribal Welfare department.

Action will be taken against the candidate and the certified officer if any not eligible candidate tries to receive PMS by producing fake certificates.

Candidates can only avail of any one scholarship offered by Govt. SC, ST, and SCA candidates who already benefitted first graduate scholarship can get the remaining amount ( Rs.40000/- (2Rs.20000+Rs.20000)) only for the academic year 2012-2013.

Candidates who are the beneficiary of the scholarship like CM Fund, Former Scholarship, the beneficiary of compassionate ground, Military man's Child, Farmer military man's child are not eligible to receive PMS Scholarship.

If any SC, ST, and SCA candidate, whose parents' income is less than Rs.200000/- paid college fees in advance that can be refunded by the college to the paid candidate. To get PMS Scholarship eligible candidates can do an online application through college. The Scholarship can be received by the college and given back o the students.

The students of SC, ST, and SCA who have joined Self-financing colleges in management allotted seats of Management quota can also get benefits of PMS Scholarship.

**சுருக்கம்**

ஆதிதிராவிடர் நலம் – சுயநிதி கல்வி நிறுவனங்களில் (சிறுபான்மையினர் நிறுவனங்கள் உட்பட) அனைத்து விதமான படிப்புகளுக்கும் இலவச / கட்டண இருக்கையில் பயிலும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர்/ மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர் மாணவ / மாணவியர்களுக்கு அரசு நியமித்த சுயநிதிக் கல்லூரிகளுக்கான கட்டணக்குழு நிர்ணயிக்கும் கல்விக் கட்டணங்கள் மற்றும் அரசு நிர்ணயிக்கும் கல்வி கட்டணங்கள் போன்றவற்றை வழங்குதல் – வழிகாட்டு நெறிமுறைகள் – வெளியிடப்படுகிறது.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந–3) துறை**

அரசாணை (நிலை) எண்.92 நாள்: 11.09.2012

ஆவணி 26, திருவள்ளுவராண்டு 2043

படிக்க:–

1. அரசாணை (நிலை) எண்.1485, சமூகநலத்துறை, நாள் 23.7.1985.
2. அரசாணை (நிலை) எண்.265, உயர்கல்வித் துறை, நாள் 12.5.1997.
3. அரசாணை (நிலை) எண்.85, உயர்கல்வித்துறை, நாள் 16.4.2010.
4. அரசாணை (நிலை) எண்.6, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 9.1.2012.
5. அரசாணை (நிலை) எண்.63, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 25.06.2012.

**ஆணை:–**

மேலே 4ல் காணும் அரசாணையில் 2011–2012–ஆம் ஆண்டு முதல் சுயநிதி கல்வி நிறுவனங்களில் (சிறுபான்மையினர் நிறுவனங்கள் உட்பட) அனைத்து விதமான படிப்புகளிலும் இலவச / கட்டண இருக்கைகளில் பயிலும் ஆதிதிராவிட/பழங்குடியின மாணவ /மாணவியர்கள் கல்வி நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய கட்டணங்களில் **அரசால் அங்கீகரிக்கப்பட்ட படிப்புகளுக்கு அரசு நியமித்த சுயநிதிக் கல்லூரிகளுக்கான கட்டணக்குழு** நிர்ணயித்த கல்வி கட்டணங்களை மட்டும் அவர்களின் பெற்றோர் / பாதுகாவலர் ஆண்டு வருமானம் ரூ.2.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்கும் பட்சத்தில் அக்கட்டணங்களை மைய அரசின் உதவித் தொகை திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மாணவர்களுக்கு வழங்க அரசால் ஆணையிடப்பட்டது. மேலே 5ல் காணும் அரசாணையில் 2012–13–ஆம் ஆண்டு முதல் மாநில அரசின் 10 ஆம் வகுப்பிற்கு மேற்பட்ட கல்வி உதவித் தொகை திட்டத்தின் கீழ், மதம் மாறிய கிறித்துவ ஆதி திராவிடர் மாணவ / மாணவியர்களுக்கும் மேற்கண்ட திட்டத்தை விரிவுபடுத்தி, அரசு ஆணையிட்டது.

2. மேற்கண்ட அரசாணைகளை திறம்பட செயல்படுத்த முடிவு செய்த அரசு கீழ்க்கண்ட வழிகாட்டு நெறிமுறைகளை வழங்கி ஆணையிடுகிறது.

1. சுயநிதி தொழில்கல்லூரிகளில் உள்ள அரசால் அங்கீகரிக்கப்பட்ட படிப்புகளுக்கு, தனியார் சுயநிதி தொழில் கல்லூரிகளின் கட்டண நிர்ணயித்திற்காக அமைக்கப்பட்ட ஒய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி தலைமையிலான குழு நிர்ணயிக்கும் கட்டணங்கள் வழங்கப்படும். (கட்டண விவரங்கள் இணைப்பு 1ல் இணைக்கப்பட்டுள்ளது)

2. சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், சட்ட கல்லூரிகள், பாலி டெக்னிக் கல்லூரிகள் மற்றும் இதர சுயநிதி கல்லூரிகளில் உள்ள அரசால் அங்கீகரிக்கப்பட்ட படிப்புகளுக்கு அரசு நிர்ணயித்த கல்வி கட்டணங்கள் வழங்கப்படும். (கட்டண விவரங்கள் இணைப்பு 2ல் இணைக்கப்பட்டுள்ளது)

3. இனிவரும் கல்வி ஆண்டுகளில் ஒற்றைச் சாளர கலந்தாய்வின் மூலம் தெரிவு செய்யப்பட்டு சுயநிதிக் கல்லூரிகளில் படிக்கும் பொறியியல் / மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த படிப்புகள் / கல்வியியல் மாணவ / மாணவியர்களுக்கு தொழில் நுட்ப இயக்ககம் / மருத்துவ கல்வி இயக்ககம் / கல்லூரி கல்வி இயக்ககம் மூலம் சுயநிதி கல்லூரிகளுக்கான கல்வி கட்டணக் நிர்ணயக்குழு நிர்ணயித்த கல்வி கட்டணங்கள் வழங்கப்படும். தொழில் நுட்ப இயக்ககம் / மருத்துவ கல்வி இயக்ககம் / கல்லூரி கல்வி இயக்ககம் தனது நிர்வாகத்திற்குட்பட்ட அனைத்து சுயநிதிக் கல்லூரிகளிலிருந்தும் மாணவ / மாணவியர்களின் எண்ணிக்கை மற்றும் கட்டண விவரங்களை சேகரித்து, தொகுத்து, தேவைப்படும் தொகையினை நேரடியாக ஆதி திராவிடர் நல ஆணையிரிடமிருந்து பெற்று உரிய கல்லூரிக்கு பிரித்து வழங்க வேண்டும். கலந்தாய்வின் போது சாதிச்சான்று மற்றும் வருமானச் சான்றிதழ்களை சரிபார்த்து தகுதியுள்ள மாணவ / மாணவியர்களை தெரிவு செய்ய ஒற்றைச் சாளர கலந்தாய்வு நடத்தும் துறை அலுவலர்களுக்கு, ஆதிதிராவிடர் நல துறையைச் சார்ந்த அலுவலர்கள் உதவிபுரிவர்.

4. சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் / பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும் ஏனைய கல்லூரிகளில் படிக்கும் ஆதிதிராவிடர் / பழங்குடியின மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவ / மாணவியர்களுக்கு கல்லூரி கல்வி இயக்ககம் / தொழில்நுட்ப கல்வி இயக்ககம் மூலம் அரசு நிர்ணயித்த கல்வி கட்டணங்கள் வழங்கப்படும் (கட்டண விவரங்கள் இணைப்பு 2ல் இணைக்கப்பட்டுள்ளது). கல்லூரி கல்வி இயக்ககம் / தொழில்நுட்ப கல்வி இயக்ககம் அனைத்து சுயநிதிக் கல்லூரிகளிலிருந்தும் மாணவ / மாணவியர்களின் எண்ணிக்கை மற்றும் கட்டண விவரங்களை சேகரித்து, தொகுத்து, தேவைப்படும் தொகையினை நேரடியாக ஆதி திராவிடர் நலத்துறை ஆணையிரிடமிருந்து பெற்று உரிய கல்லூரிக்கு பிரித்து வழங்க வேண்டும். கல்லூரிசேர்க்கையின் போது (Admission) சாதிச்சான்று மற்றும் வருமானச் சான்றிதழ்களை சரிபார்த்து தகுதியுள்ள மாணவ / மாணவியர்களை தெரிவு செய்ய கல்லூரி நிர்வாகத்திற்கு தொடர்புடைய மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் உதவிபுரிவர்.

5. அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் பயிலும் தகுதியுள்ள ஆதிதிராவிடர் / பழங்குடியின மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவ / மாணவியர்களுக்கு அரசு நியமித்த சுயநிதி கல்லூரிகளுக்கான கட்டண நிர்ணயக்குழு நிர்ணயித்த கல்வி கட்டணங்கள் மட்டும் வழங்கப்படும். அண்ணா பல்கலைக்கழகத்தில் நடத்தப்படும் Self supporting Courses பயிலும் தகுதியுள்ள ஆதிதிராவிடர் / பழங்குடியின மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவ / மாணவியர்களுக்கு அரசு நியமித்த சுயநிதி கல்லூரிகளுக்கான கட்டண நிர்ணயக்குழு நிர்ணயித்த கல்வி கட்டணங்கள் மட்டும் வழங்கப்படும்.

6. ஆதிதிராவிடர் நல ஆணையர் அவர்கள், ஒவ்வொரு கல்வி ஆண்டும் இத்திட்டத்திற்கு தேவையான முழு தொகையினையும் ஆண்டின் தொடக்கத்திலேயே தொடர்புடைய இயக்ககத்திற்கு பிரித்து வழங்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க அறிவுறுத்தப்படுகிறார்.

**7.** ஒவ்வொர் ஆண்டும் அரசினால் கல்வி உதவித் தொகை திட்டங்களுக்காக வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்படும் தொகையினை 32 மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்களின் பெயரில் தன்பெயர் வைப்புக் கணக்கு துவக்கி அவற்றில் பற்று வைத்து செலவிட அனுமதிப்பது போல, இனி வரும் ஆண்டுகளில் அவற்றோடு ஆணையர், தொழில்நுட்ப கல்வி / இயக்குநர், மருத்துவ கல்வி / இயக்குநர் கல்லூரி கல்வி / இயக்குநர் சட்டக் கல்வி போன்ற அலுவலர்களின் பெயரில் தன்பெயர் வைப்புக் கணக்கு துவக்கி அவற்றில் பற்று வைத்து மேற்கண்ட திட்டத்தினை செயல்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்க ஆதிதிராவிடர் நல ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார். பின்னர் வருட இறுதியில் அனைத்து துறைகளிடமிருந்து பயனீட்டுச் சான்றிதழினை பெற்று அரசுக்கு சமர்பிக்க ஆதிதிராவிடர் நலத்துறை ஆணையர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**8.** சுயநிதி கல்வி நிறுவனங்கள் ஆதிதிராவிடர் / பழங்குடியின மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவ / மாணவியர்கள் கல்வி நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய அரசு நியமித்த சுயநிதி கல்லூரிகளுக்கான கட்டணக்குழு நிர்ணயித்த கட்டணங்களை மாணவ / மாணவியர் சேர்க்கையின் போது அவர்களிடமிருந்து வசூலிக்கக் கூடாது. மாறாக மாணவ / மாணவியர்கள் செலுத்த வேண்டிய மேற்கண்ட கட்டணங்களை தொழில்நுட்ப கல்வி இயக்ககம் / மருத்துவ கல்வி இயக்ககம் / கல்லூரி கல்வி இயக்ககம் தேவையின் அடிப்படையில் ஆதிதிராவிடர் நல ஆணையரிடமிருந்து கல்வி ஆண்டின் தொடக்கத்திலேயே தொகையினை பெற்று, தனது நிர்வாகத்தின் கீழ் உள்ள அனைத்து சுயநிதிக் கல்லூரிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**9.** இத்திட்டத்தின்படி பெற்றோர்/பாதுகாவலரின்ஆண்டு வருமானம் ரூ. 2.00 இலட்சத்திற்கு மிகாமல் உள்ள தகுதியுள்ள ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் மாணவ / மாணவியர்களிடமிருந்து எந்தவித கல்வி கட்டணங்களையும் தொடர்புடைய சுயநிதி கல்வி நிறுவனங்கள் வசூலிக்ககூடாது என்பதை சம்மந்தபட்ட கல்வி நிலைய இயக்கங்கள் உறுதிபடுத்திக் கொள்ள வேண்டும்.

**10.** ஏற்கெனவே பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.2.00 இலட்சத்திற்கு மிகாமல் உள்ள தகுதியுள்ள ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் மாணவ / மாணவியர்களுக்கு அந்தந்த மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் வழங்கப்பட்டு வரும் கல்வித் உதவித் தொகையானது (Scholarship) அதே முறையிலேயே தொடர்ந்து வழங்கப்படும்.

**11.** ஒற்றைச் சாளர கலந்தாய்வில் கலந்துகொண்டு தனியார் சுயநிதி கல்லூரிகளில் சேர்க்கைப் பெற்ற, பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.2.00 இலட்சத்திற்கு மிகாமல் உள்ள ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / மதம்மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் மாணவ / மாணவியர்களிடமிருந்து அரசு நியமித்த சுயநிதி கல்லூரிகளுக்கான கட்டணக்குழு (Presently Justice N.V. Balasubramanian Commission) நிர்ணயித்த கல்வி கட்டணத்தை வசூலிக்க கூடாது என சம்பந்தபட்ட தனியார் சுயநிதி கல்வி நிறுவனங்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள் ஒற்றைச் சாளர முறையில் சுயநிதி கல்லூரிகளில் சேரும் மாணவ / மாணவியர்களுக்கு முதல் தலைமுறை மாணவர்களுக்கு கல்வி கட்டணம் வழங்கும் திட்டத்தினை போன்று, இத்திட்டத்திலும் கலந்தாய்வின் போது கட்டணக்குழு நிர்ணயித்த கல்வி கட்டணத்தை விலக்களித்து தொடர்புடைய சுயநிதி கல்லூரியில் சேர்க்கை செய்ய வேண்டும். கலந்தாய்வின் போது மாணவரின் சாதிச்சான்று மற்றும் வருமானச் சான்றிதழ்களை சரிபார்த்து மேற்காணும் சலுகை வழங்க வேண்டும். பிற முறைகளை பின்பற்றி சுயநிதி கல்லூரிகளில் சேர்க்கை நடைபெறும் தருணங்களிலும் அரசு நிர்ணயித்த கல்வி கட்டணங்களைக் தகுதியுள்ள மாணவ / மாணவியர்களிடமிருந்து கல்வி நிறுவனங்கள் வசூலிக்கக்கூடாது.

**12.** சான்றிதழ்களை சரிபார்ப்பது, தவறான சான்றிதழ்கள் அளிக்கும் மாணவர் மற்றும் பெற்றோர் மீது நடவடிக்கை எடுப்பது, மாணவர் எந்த வகையான கல்வி பயில அனுமதிக்கப்பட்டாரோ அதனை அனுமதித்த அலுவலர் / அமைப்புதான் நடவடிக்கை தொடர வேண்டும்.

**13.** ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் மாணவ / மாணவியர்களுக்கு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையால் வழங்கப்படும் கல்வி உதவித் தொகை தொடர்பான பொது விதிகள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் படி, அரசு வழங்கும் கல்வி சலுகைகளில் ஏதேனும் ஒன்றினை மட்டுமே பயன்படுத்த இயலும். உதாரணமாக தொழிற்கல்வி பயிலும் முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்கு கல்வி கட்டணத்தை (Tution fees) அரசே ஏற்றுக் கொள்ளும் திட்டம் மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையால் வழங்கப்படும் கல்வி கட்டணச் சலுகை திட்டம் இவற்றில் ஏதேனும் ஒன்றில் மட்டுமே தகுதிக்கேற்ப மாணவர்கள் பயனடைய இயலும். மேலும் இந்தக் கல்வி ஆண்டினைக் பொருத்தவரை மட்டும் (2012–2013) பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.2.00 இலட்சத்திற்கு மிகாமல் உள்ள ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / மதம்மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் மாணவ மாணவியர்கள், தொழிற்கல்வி பயிலும் முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்குக்கான திட்டத்தின்கீழ் ஏற்கெனவே பயனடைந்திருந்தால் மீதமுள்ள தொகையினை (உதாரணமாக ரூ.40000/– ரூ.20000=ரூ.20000/–) இத்துறையின் புதிய கல்வி கட்டணச் சலுகை திட்டத்தின் கீழ் பெற்றுக் கொள்ளலாம்.

**14.** மேலும் மாண்புமிகு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் கல்வி உதவித் தொகை பெறுவர்கள் மற்றும் விவசாயிகளின் குழந்தைகள் / இறந்த அரசு ஊழியர்களின் வாரிசுகள் / இராணுவ வீரர்களின் குழந்தைகள் / முன்னாள் இராணுவ வீரர்களின் குழந்தைகள் போன்றோருக்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகை போன்றவற்றை பெறும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / மதம்மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் மாணவ / மாணவியர்கள், ஆதிதிராவிடர் நலத்துறையின் கல்வி கட்டணங்களை பெறும் திட்டத்தின் கீழ் பயன்பெற இயலாது.

**15.** 2012–2013–ஆம் கல்வியாண்டில் மேற்கண்ட திட்டத்தில் பயன்பெற தகுதியுள்ள ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் மாணவ / மாணவியர்கள் ஏற்கெனவே கட்டணங்களை தொடர்புடைய சுயநிதி கல்லூரிகளுக்கு செலுத்தி இருப்பின் அக்கட்டணங்கள் (அரசு நியமித்த சுயநிதி கல்லூரிகளுக்கான கட்டணக்குழு நிர்ணயித்த கட்டணம் மட்டும்) கல்வி நிறுவனங்களால் அம்மாணவர்களுக்கு திரும்ப வழங்கப்படும். 2012–2013ஆம் கல்வி ஆண்டினை பொருத்தவரை கல்வி உதவித் தொகை (Scholarship) பெறும் முறையினை போலவே அந்தந்த சுயநிதி கல்வி நிறுவனங்கள் தகுதியுள்ள மாணவர்களை தெரிவு செய்து அவர்களுக்கு அளிக்க வேண்டிய கல்வி கட்டணங்களை இணையதளம் மூலம் தொடர்புடைய மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்களுக்கு விண்ணப்பித்து, கல்விக் கட்டணங்களை பெற்று மாணவ / மாணவியர்களுக்கு அளிக்க வேண்டும்.

**16.** பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.2.00 இலட்சத்திற்கு அதிகமாக உள்ள ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / மதம்மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் மாணவ மாணவியர்கள், இத்திட்டத்தின் கீழ் பயனடைய இயலாது. அத்தகைய மாணவர்கள் முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கு உயர்கல்வித் துறையால் அளிக்கப்படும் கல்வி கட்டணச் சலுகையை பெற்றுக் கொள்ளலாம்.

17. இத்திட்டமானது சுயநிதி கல்வி நிறுவனங்களில் உள்ள அரசால் அங்கீகரிக்கப்பட்ட படிப்புகளில் நிர்வாக ஒதுக்கீட்டில் பயிலும் (Management quota) ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் மாணவ மாணவியர்களுக்கு அரசு நியமித்த சுயநிதி கல்லூரிகளுக்கான கட்டணக்குழு நிர்ணயித்த தொகையானது வழங்கப்படும். பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.2.00 இலட்சத்திற்கு மிகாமல் உள்ள ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் மாணவ / மாணவியர்களுக்கும் இது பொருந்தும்.

18. மேலும் இத்திட்டத்தினை கண்காணிக்க இரண்டாம் நிலை அலுவலர்கள் அடங்கிய கண்காணிப்புக் குழுவினை நியமித்து தொடர்ச்சியான கண்காணிப்பில் இத்திட்டத்தினை செயல்படுத்த ஆதிதிராவிடர் நல ஆணையர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

3. இவ்வாணை உயர்கல்வித் துறையின் அ.சா.எண்.16981/J1/2012 நாள் 6.9.2012 / மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் அ.சா.எண்.31865/MCA1/2012 நாள் 3.9.2012. ஆகியவற்றின் ஒப்புதல் பெற்று வெளியிடப்படுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

ஆ.சு. ஜீவரத்தினம்,
அரசு செயலாளர்.

பெறுநர்
ஆணையர், தொழில்நுட்ப கல்வி, சென்னை–25.
இயக்குநர், மருத்துவக் கல்வி, சென்னை–10.
இயக்குநர், சட்ட கல்வி , சென்னை–35.
இயக்குநர், கல்லூரிக்கல்வி சென்னை–6.
முதன்மைச் செயலாளர்,
உயர்கல்வித்துறை/ மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை /சட்டத்துறை
தலைமைச் செயலகம், சென்னை–9.
ஆணையர் ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை–5.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை–5.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் / அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்.

<u>நகல்:–</u>
செயலாளர், பொறியியல் மாணவர் சேர்க்கை,
அண்ணா பல்கலைக்கழகம் சென்னை–25.
தேர்வுக்குழு, மருத்துவக் கல்வி இயக்ககம், சென்னை–10.
அனைத்து சுயநிதி பொறியியல் கல்லூரிகள்,
(தொழிற்நுட்ப கல்வி ஆணையர் சென்னை–25. வழியாக),
அனைத்து சுயநிதி மருத்துவ கல்லூரிகள் (மருத்துவ கல்வி இயக்குநர், சென்னை–10 வழியாக)
அனைத்து சுயநிதி சட்டக்கல்லூரிகள் (சட்டகல்வி இயக்குநர், சென்னை–35 வழியாக)
அனைத்து சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் (கல்லூரி கல்விக் இயக்குநர், சென்னை–6 வழியாக) சென்னை–6.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.

**பிற்சேர்க்கை**

**இணைப்பு–1**

**நீதியரசர் N.V. பாலசுப்பிரமணியன் குழு நிர்ணயித்த கல்வி கட்டணங்கள்:**

**2012–13ஆம் கல்வி ஆண்டிற்குரியது:**

## ENGINEERING COURSES

| படிப்பு | தரச்சான்றில்லா படிப்பு (Non Accredited Course) | தரச்சான்றுள்ள படிப்பு (Accredited Course) | தரச்சான்று மற்றும் தரச்சான்றில்லா நிர்வாக ஒதுக்கீடு (Management Quota) |
|---|---|---|---|
| U.G. (Engg. Course) (B.E./B.Tech./B.Arch.) (per annum.) | Rs. 40,000/- | Rs. 45,000/- | Rs. 70,000/- |
| P.G. (M.E./M.Tech./M.Arch.) (per semester). | Rs. 25,000/- | Rs. 30,000/- | Rs.25,000/- (non accredited) Rs.30,000/- (Accredited) |
| M.B.A./M.C.A. (per semester). | Rs.15,000/- | Rs. 18,000/- | Rs.15,000/- (non accredited) Rs.18,000/- (Accredited |
| Five year Integrated Course (M.Sc.) (per semester). | Rs. 15,000/- | Rs. 18,000/- | Rs.15,000/- (non accredited) Rs.18,000/- (Accredited |
| PGDBM/PGDBA (per semester) | Rs. 10,000/- | Rs. 10,000/- | Rs.10,000/- (for non accredited / Accredited) |

## TEACHERS EDUCATION AND TRAINING COURSES IN SELF FINANCING COLLEGES

| **Name of the Course** | | **Fee fixed by the Committee (per annum)** |
|---|---|---|
| D.T.Ed. | | Rs. 23,000/- |
| B.Ed./B.Ed. Special Education | Accredited | Rs. 46,500/- |
| | Non Accredited | Rs. 41,500/- |
| M.Ed. | | Rs. 47,500/- |
| B.P.E.d. | | Rs. 20,000/- |
| M.P.Ed. | | Rs. 25,000/- |
| D.P.E | | Rs. 12,500/- |

**MEDICAL EDUCATION AND TRAINING COURSES IN SELF FINANCING COLLEGES**

| Name of the Course | Fee fixed by the Committee ( per annum) |
|---|---|
| P.G. Medical Degree (Clinical) | Rs. 1,75,000/- |
| P.G. Medical Degree (Non-Clinical) | Rs. 1,25,000/- |
| P.G. Diploma | Rs. 90,000/- |
| MDS (Para Clinical) | Rs. 1,25,000/- |
| MDS (Clinical) | Rs. 1,75,000/- |

| Sl.No. | Name of the Course | Fees fixed in Rs. |
|---|---|---|
| | **MBBS** | **(Per annum)** |
| **1** | PSG Institute of Medical Sciences & Research, Coimbatore | 2,80,000/- |
| **2** | Sree Moogambika Institute of Medical Sciences, Kulashekaram | 2,80,000/- |
| **3** | Melmaruvathur Adhiparasakthi Institute of Medical Science & Research, Melmaruvathur | 2,80,000/- |
| **4** | Karpaga Vinayaga Institute of Medical Science, Madhurantagam | 2,80,000/- |
| **5** | Sri Muthukumaran Medical College and Hospital, Chennai | 2,60,000/- |
| **6** | Chennai Medical College Hospital & Research Centre, Trichy | 2,60,000/- |
| **7** | Tagore Medical College, Chennai | 2,60,000/- |
| **8** | Dhanalakshmi Srinivasan Medical College, Perambalur | 2,60,000/- |
| **9** | Annapoorna Medical College, Salem | 2,60,000/- |
| **10** | Madha Medical College, Kundrathur, Chennai | 2,60,000/- |
| **11** | New Institutions/Institutions who have not submitted the proposals for MBBS Course | 2,30,000/- |
| **12** | B.D.S. course (All self financing colleges) | 1,00,000/- |
| | **Para Medical Courses** | |
| **13** | B.Sc., Nursing | 30,000/- |
| **14** | M.Sc. Nursing | 50,000/- |
| **15** | B. Pharm | 28,000/- |
| **16** | M. Pharm | 45,000/- |
| **17** | B.P.T. | 28,000/- |
| **18** | M.P.T. | 45,000/- |
| **19** | B.O.T. | 28,000/- |
| **20** | M.O.T | 45,000/- |
| **21** | B.H.M.S. | 35,000/- |
| **22** | M.D. (Homeo) | 50,000/- |
| **23** | B.S.M.S. | 30,000/- |
| **24** | B.A.M.S. | 30,000/- |
| **25** | B.N.Y.S. | 25,000/- |

A.S. JEEVARATHINAM,
SECRETARY TO GOVERNMENT

/TRUE COPY/

SECTION OFFICER

**பிற்சேர்க்கை**

**இணைப்பு–2**

**அரசு நிர்ணயித்த சுயநிதி கல்லூரிகளுக்கான கட்டண விவரங்கள்**

**1. கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்**

| **Courses** | **Self finance colleges and self financing courses in colleges (Tuition fees only) (per annum)** |
|---|---|
| **Bachelor Degree Courses** | |
| 1. B.A. | Rs.1350/- |
| 2.B.Sc., B.Com., | Rs.2850/- |
| 3. Job Oriented Courses<br>(i) B.A. Corporate Secretaryship<br>(ii) B.A Co-operation<br>(iii) B.A. Journalism / Tourism<br>(iv) B.Sc., Bio-Chemistry<br>(v) B.Sc., Micro-Biology<br>(vi) B.Sc., Home Science<br>(vii)B.Sc., Nutrition- Dietics<br>(viii) B.Sc., Hotel Management and Catering<br>(ix) B.Sc., Electronic Science<br>(x) B.Sc., Industrial Electronics<br>(xi) B.E.M. Bachelor of Environmental Mathematics<br>(xii) B.B.A., / B.B.M./B.Sc. Computer Science<br>(xiii) B.A. Social work<br>(xiv)B.A Bank Management<br>(xv) B.A. Fine Arts<br>(xvi) B.A. Industrial Organisation.(Leather)<br>(xvii) B.A. Defence studies<br>(xviii) B.A. Music<br>(xix) B.A. Physical Education, Health Education and Sports<br>(xx) B.Sc., Visual communication<br>(xxi) B.Sc., Dairy Science<br>(xxii) B.Sc., Rural Development<br>(xxiii) B.Sc., Interior design<br>(xxiv) B.Sc., Health care and hospital Management | Rs.4750/- |

| **Post Graduate Degree Courses** | |
|---|---|
| 1. M.A. | Rs.1350/- |
| 2. M.Sc., M.Com., | Rs.2850/- |
| 3. Job Oriented Courses<br>I. M.A., Social Work<br>II. M.A., Performing Arts<br>III. M.A. Music<br>IV. M.A. Co-operation<br>V. M.A. Corporate Secretaryship<br>VI. M.A. Public Administration<br>VII. M.Sc., Home Science<br>VIII. M.Sc., Bio-Chemistry<br>IX. M.Sc., MRSC<br>X. M.Sc., Foods and Nutrition<br>XI. M.Sc., Food Service Management and Dietetics<br>XII. M.Sc.,<br>XIII. M.Sc., Electronic Science<br>XIV. M.Sc., Computer Science<br>XV. M.Sc., Textile and Clothing<br>XVI. M.Sc., Nutrition and Dietics<br>XVII. M.Sc., Micro – Biology<br>XVIII. M.Sc., Environment Science<br>XIX. M.Sc., Industrial Electronics<br>XX. PGDCA<br>XXI. MCA<br>XXII. PGLCS<br>XXIII. PGLMS<br>XXIV. P.G. Diploma in Agriculture<br>XXV. P.G. Diploma in Bio-Fertilizers<br>XXVI. P.G. Diploma in Acturial Science | Rs.4750/- |

**பாலிடெக்னிக் கல்லூரிகள் (self finacing) (அரசு நிர்ணயித்த கல்வி கட்டணங்கள்)**

| **Category of Fees** | **FEE PER ANNUM** | |
|---|---|---|
| | Free Seat | Payment Seat |
| Tution Fees | Rs.5,500/- | Rs.18,200/- |
| Development Fees* | Rs.1,000/- | Rs.3,500/- |
| **Total** | **Rs.6,500/-** | **Rs.21,700/-** |

*As fixed by all India Council for Technical Education and likely to be revised from time to time.

A.S. JEEVARATHINAM,
SECRETARY TO GOVERNMENT

/TRUE COPY/

SECTION OFFICER

ஆ.சு. ஜீவரத்தினம்,
அரசு செயலாளர்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.

## சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – கல்வி – சுயநிதிக் கல்வி நிறுவனங்களில் அரசு ஒதுக்கீடு செய்யும் இலவச / கட்டண இருக்கைகளில் பயிலும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மாணவ / மாணவியர்க்கு கட்டாய, திருப்பி செலுத்தப்படாத அனைத்து கல்வி கட்டணங்களை வழங்கி ஆணைகள் – வெளியிடப்படுகின்றன.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந3) துறை

அரசாணை (நிலை) எண் : 6

நாள் : 09.01.2012

மார்கழி 24, திருவள்ளுவர் ஆண்டு 2042

படிக்கப்பட்டது.

1) அரசாணை (நிலை) எண்.26, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 30.03.2000.
2) ஆணையர், ஆதிதிராவிடர் நலம் கடித எண்.ஜே1/22811/2009, நாள் 25.03.2011 மற்றும் 11.04.2011.

---

ஆணை :

மேலே பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், சுயநிதிக் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீடு செய்யும் இலவச இடங்களில் பயிலும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவ / மாணவியர்க்கு அவர்களது பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.50,920/–க்குள் உள்ளவர்களுக்கு அரசு மற்றும் அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களில் அப்படிப்பிற்கு விதிக்கப்படும் கல்வி கட்டண அளவிற்கு கல்வி கட்டணச் சலுகை வழங்கி ஆணையிடப்பட்டது. இவ்வாணையின் மூலம் அளிக்கப்பட்ட கல்வி கட்டணச் சலுகை அரசு / அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களில் விதிக்கப்படும் கட்டண அளவிற்கே சுயநிதிக் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீடு செய்யும் இலவச இடத்தில் பயிலும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

2) ஆதிதிராவிடர் நலத்துறை ஆணையர், தன்னுடைய கருத்துருவில் மைய அரசின் வழிகாட்டுதலின்படி கட்டாய மற்றும் திருப்பி செலுத்தப்படாத அனைத்து கட்டணங்களும் வழங்கப்பட வேண்டும் என உள்ளதால் இலவச இடங்களில் பயிலும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மாணாக்கர்களுக்கு 2011–2012 ஆம் ஆண்டிலிருந்து மேல்நிலைக்கு பிந்தைய படிப்புகளுக்கான உதவித் தொகை மைய அரசின் வழிகாட்டுதலின்படி முழுமையாக வழங்கலாம் எனவும் இந்த உதவித் தொகை எல்லா வகையான அங்கீகரிக்கப்பட்ட தனியார் கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவ / மாணவியர்க்கு பொருந்தும் எனவும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய ஆதிதிராவிடர்களுக்கு சுயநிதிக் கல்லூரிகளில் சேர்ந்து பயில தடையாக உள்ள அரசாணை (நிலை) எண்.26, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 30.03.2000–த்தை ரத்து செய்யலாம் எனவும் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3) ஆதிதிராவிடர் நலத்துறை ஆணையரின் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து "சுயநிதிக் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீடு செய்யும் இலவச இடங்களில் பயிலும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவ / மாணவியர்க்கு அவர்களது பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.50,920/–க்குள் உள்ளவர்களுக்கு அரசு மற்றும் அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களில் அப்படிப்பிற்கு விதிக்கப்படும் கல்வி

கட்டண அளவிற்கு கல்வி கட்டணச் சலுகை வழங்கி ஆணையிட்டுள்ள அரசாணை (நிலை) எண்.26, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 30.03.2000"–ல் மாற்றம் செய்து, சுயநிதிக் கல்வி நிறுவனங்களில் (சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்கள் உட்பட) அனைத்துவிதமான படிப்புகளுக்கும் இலவச / கட்டண இருக்கைகளில் பயிலும் ஆதிதிராவிட / பழங்குடியின மாணவ / மாணவியர்கள் பயன்பெறும் வகையில் திருப்பி செலுத்தப்படாத அனைத்து கட்டாயக் கட்டணங்களையும் (Enrollment / Registration, Tuition, Games, Union, Library, Magazine, Medical Examination and such other fee compulsory payable by the scholar to the institution or university / board) அரசால் அங்கீகரிக்கப்பட்ட படிப்புகளுக்கு "அரசு நியமித்த சுயநிதிக் கல்லூரிகளுக்கான கட்டணக் குழு" நிர்ணயித்த திருப்பி செலுத்தப்படாத கட்டாய கட்டணம் அனைத்தையும் மைய அரசின் உதவித்தொகை திட்டத்தின் கீழ் 2011–2012ஆம் கல்வி ஆண்டிலிருந்து வழங்க அரசு ஆணையிடுகிறது. 42

4) இத்திட்டத்தில் பயன் பெற ஆதிதிராவிடர் / பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த மாணவ / மாணவியர்களின் பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூபாய் இரண்டு இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

5) மேலே பத்தி 3–ல் ஆணையிடப்பட்ட சலுகையின் மூலம் ஏற்படும் கூடுதல் செலவினம் ஏற்கனவே நடைமுறையிலுள்ள கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும். இச்செலவினத்திற்கு தேவைப்படும் கூடுதல் தொகை திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த மதிப்பீட்டில் பெற்றுக்கொள்ள உரிய கருத்துருக்களை உரிய காலத்தில் அரசுக்கு அனுப்ப ஆணையர், ஆதிதிராவிடர் நலத்துறை அறிவுறுத்தப்படுகின்றார்.

6) இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு. எண்.03/DS(VS)/2011, நாள் 06.01.2012 ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆ.சு. ஜீவரத்தினம்,
அரசுச் செயலாளர்

பெறுநர்:–
ஆணையர், ஆதிதிராவிடர் நலம், சென்னை–5.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை–5.
இயக்குநர், பள்ளி கல்வித்துறை, கல்லூரி சாலை, சென்னை–6.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் /
அனைத்து மாவட்ட ஆதி(ம)பந அலுவலர்கள்.
மாநிலக் கணக்காய்வு தலைவர், சென்னை–6/18/35.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–8/35/6.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
நகல்:–
நிதித் (ஆதி(ம)பந / வசெ பொது–II) துறை, சென்னை–9.
பள்ளி கல்வித்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.
முதலமைச்சர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை–9.
மாண்புமிகு ஆதிதிராவிட நல அமைச்சரின்
நேர்முக உதவியாளர், சென்னை–9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின்
செயலாளரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின்
அனைத்துப் பிரிவுகள், சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி

10.1.12
பிரிவு அலுவலர்
10/1/12